சி.சி எண்.136/2022 நாள்: 06.05.2024

அ.சா. 5 மாதவன்

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, ஆனால் நான் திருவாடனை சந்தையில் இருந்தேன். எனக்கு பக்கத்து வீட்டுக்காரர் போன் மூலம் தகவல் சொன்னார்கள். நான் எனது ஊருக்கு சென்று எனது மகள், மனைவியை அழைத்துக்கொண்டு சென்றேன் என்றும், நான் வரும்வரை அவர்கள் எங்கள் ஊரிலேயே இருந்தார்கள் என்றால் சரிதான். எனது ஊரிலிருந்து தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு வரும் வழியில் கைகாட்டி மற்றும் புளியால் மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அங்கு காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை எதுவும் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். என் மனைவியும், என் மகளும் அ.சா.1ஐ அடித்து காயப்படுத்தியதாக புகார் கொடுத்து அதன் பேரில் அவர்கள் வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** **இல்லை.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.